ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2025.12.15 |


# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2025 நவெம்பர்

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 நவெம்பரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன

**கொ.மு.சு தயாரிப்பு 55.5**
2025 நவெம்பர்

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 நவெம்பரில் 55.5 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்தது.** அனைத்து துணைச் சுட்டெண்களிலிருந்தான சாதகமான பங்களிப்புக்களுடன் மாதத்திற்கு மாத அடிப்படையொன்றில் தயாரிப்பு நடவடிக்கைகளில் இது விரிவாக்கமொன்றை எடுத்துக்காட்டுகின்றது.

புதிய கட்டளைகளில் ஏற்பட்ட விரிவாக்கமானது உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் புடவைகள் மற்றும் ஆடைகள் தயாரிப்புத் துறைகளில் அதிகரித்த நடவடிக்கையால் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, உற்பத்தியானது நடுநிலையான மட்டத்தில் காணப்பட்டு, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பரந்தளவிலான மாற்றமடையாத வெளியீட்டைப் பிரதிபலித்தது. இதற்குமேலதிகமாக, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்புக்கள் மாதத்திற்கு மாதம் அதிகரிப்பை பதிவுசெய்தன. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் உள்ளீடுகளுக்கான தொடர்ச்சியான கேள்வியைப் பிரதிபலித்து முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் நவெம்பரில் நீட்சியடைந்து காணப்பட்டது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

*கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு*

| மாறி | ஒக் | நவெ | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **61.0** | **55.5** | - | **அதிகரிக்கின்றது, மெவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 64.0 | 58.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 62.5 | 50.0 | - | அதிகரிப்பிலிருந்து நடுநிலை |
| தொழில்நிலை | 56.0 | 55.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 62.5 | 57.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 58.0 | 57.7 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அண்மைய பாதகமான வானிலை நிலைமைகள் காணப்பட்ட போதிலும், எதிர்பார்க்கப்படும் பருவகால கேள்வியை பிரதான காரணமாகக்கொண்டு, அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்புத் தோற்றப்பாடு சாதகமாகக் காணப்படுகின்றது.

### உலகளாவிய தோற்றப்பாடு:
கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| **யூரோ வலயம்** | நடுநிலையிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 திசெம்பர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான விரிவடைதலொன்றை எடுத்துக்காட்டி, 2025 நவெம்பரில் 50.5 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்தது.**

மாதத்தின் இறுதியில் ஏற்பட்ட பாதகமான வானிலை நிலைமைகளின் தாக்கத்தை பகுதியளவில் பிரதிபலித்து, 2025 நவெம்பரில் வியாபார நடவடிக்கைகள் மெதுவான வேகத்தில் விரிவடைந்தன. தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணிகளே விரிவாக்கத்தின் முதன்மை தூண்டுதல்களாக இருந்தன. மேலும், அதிகரித்த கடன்வழங்கலுக்கு மத்தியில் நிதியியல் பணிகள் தொடர்ந்து வலுவடைந்து, ஒட்டுமொத்த அதிகரிப்புக்கும் பங்களித்திருக்கின்றன.

நிதியியல் பணிகளுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்தில் மேம்பட்ட நடவடிக்கை என்பன மூலம் துணையளிக்கப்பட்டு 2025 நவெம்பரில் புதிய வியாபாரங்கள் அதிகரித்தன.

பருவகால தொழிற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்ய நிறுவனங்கள் ஆட்சேர்ப்பினை அதிகரித்தமையால் 2025 நவெம்பரில் தொழில்நிலை தொடர்ந்தும் விரிவாக்கமடைந்தது. நிலுவையிலுள்ள பணிகள் அதிகரித்து, தொடர்ந்து மூன்று மாதங்களாக நீடித்த வீழ்ச்சியை திரும்பலடையச்செய்தது.


| மாறி | ஒக் | நவெ | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **66.0** | **50.5** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 61.5 | 53.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.5 | 55.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 47.8 | 51.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 84.2 | 63.3 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வலிமையடைதலின் வேகம் மிதமடைந்த போதிலும் அடுத்த காலாண்டுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் மேம்பட்டன. பாதகமான வானிலை நிலைமைகளால் ஏற்பட்ட நுகர்வோர் கேள்விக்கான இடையூறுகள் பற்றி சில பதிலிறுப்பாளர்கள் கவலைகளைத் தெரிவித்தனர். எவ்வாறிருப்பினும், ஒப்பீட்டு ரீதியாக சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளும் பண்டிகைக்கால கேள்வியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பும் வியாபார எதிர்பார்க்கைகளுக்குத் துணையளித்தன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 நவெம்பர்**
**50.5**

**கொமுசு - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2025 திசெம்பர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் விநியோக நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.